# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,937/1 — 1970 දෙසැම්බර් 19 වැනි සෙනසුරාදා — 1970.12.19**

14,937/1 ம் இலக்கம் — 1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

#### முத்திரைக் கட்டளைச் சட்டம்

*முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் (247 ம் அத்தியாயத்தில்) 6 ம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினலாக்கப்பட்ட விதி.*

கொழும்பு,
1970 ம் ஆண்டு டிசெம்பர் மீ 14 ந் உ.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

**விதி**

முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் (247 ம் அத்தியாயத்தில்) 6 ம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1966 ம் ஆண்டு ஆகஸ்டு 5 ம் தேதிய 14,707 ம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ம் தேதிய 14,933 ம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதியினல் கடைசியாகத் திருத்தப்பட்டதுமான விதியானது அதற்கான அட்டவணையில் 84 ம் அம்சத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அம்சத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

"85. சர்வதேசக் கல்வி ஆண்டு 1970 ஐக் குறிக்குமுகமாக வெளியிடப்பட்ட 15 சத மதிப்புள்ள அஞ்சல், இறைவரி முத்திரைகள். இந்த முத்திரையில் உள்ள ஓலைச்சுவடியின் படமானது பௌத்த பொற்காலத்தின்போது 455 விருந்து 467 வரையான ஆண்டு களில் நிகழ்ந்த மகத்தானதொரு கல்வி நிகழ்ச்சியான, திரிபிடகம் (புத்தபிரானின் போதனைகளைத் தாங்கிய பாளி மொழிப் புத்தகங்களின் தொகுப்பு) எழுதப்படுமாறு பணிக்கப்பட்டதைக் குறிப்பதாக விளங்குகிறது. ஞானஒளி பொருந்திய ஒரு மனித உருவத் தலையைக் குறிப்பதாக விரிவடைந்துகொண்டு போகும் வட்டங்கள் விளங்குகின்றன".

12—977


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கவனிக்க.—14,936/1 இலக்கங் கொண்ட அதிவிசேட வர்த்தமானத் தொடரின் இறுதி இலக்கம் 14,936/5.